13. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

38. தமிழ்நாடு வெடிமருந்து தொழில் நிறுவனத்தினால் தயாரிக்கப்படும் பொருட்களை விற்பனை செய்யும் சரக்கு ஏஜென்டுக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 14-10-1991 ஆம் நாளிட்ட 417 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

39. உணவகங்கள், சிற்றுண்டிச் சாலை, ஏனைய உணவு நிலையங்களில் விற்பனை செய்யப்படும் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பொருட்கள் நீங்கலான உணவு மற்றும் பானங்களுக்கு செலுத்தப்பட வேண்டிய வரியினை குறைப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 21—10—1991 ஆம் நாளிட்ட 422 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

40. ஐந்தாவது பட்டியலின் கீழ் வருகின்ற பொருட்களின் விற்பனைக்கு சலுகை முறையில் வரிவிதிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 4—11—1991 ஆம் நாளிட்ட 452 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது].

41. தமிழ்நாடு கட்டுமானக் கழகத்தின் 1990-91 ஆம் ஆண்டிற்கான பதினோராவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

ஆ. அறிக்கைகள். அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

53. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் நான்காவது அறிக்கை 1991-92.

54. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஐந்தாவது அறிக்கை 1991-92.